BEA 東亞銀行

*10 DES VOEUX ROAD CENTRAL,*
*HONG KONG*

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலவர அறிக்கை 2023 டிசம்பர் 31ல் நிலவியபடி

| | 2023 | 2022 |
|---|---|---|
| | **HK$ Mn** | HK$ Mn |
| **சொத்துகள்** | | |
| வங்கிகளிடமுள்ள ரொக்கம், இருப்புகள் | **45,903** | 54,579 |
| வங்கிகளிடமுள்ள வைப்புகள், கொடுத்த முன்தொகைகள் | **43,691** | 60,203 |
| வர்த்தக உண்டியல்கள் | **373** | 529 |
| வர்த்தகச் சொத்துகள் | **3,049** | 1,530 |
| டெரிவேட்டிவ் சொத்துகள் | **9,056** | 11,092 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முன்தொகைகள் | **526,984** | 542,394 |
| முதலீட்டு பங்கு பத்திரங்கள் | **167,270** | 147,007 |
| இணை நிறுவனங்களிலும் கூட்டு தொழில்களிலும் முதலீடுகள் | **8,384** | 9,061 |
| நிலையான சொத்துக்கள் | **13,493** | 13,476 |
| - முதலீட்டுச் சொத்துகள் | **5,105** | 5,166 |
| - இதர சொத்துகளும் சாதனமும் | **7,603** | 7,593 |
| - பயன்பாட்டு உரிமையுள்ள சொத்துகள் | **785** | 717 |
| நற்பெயர் மற்றும் கண்ணிற்கு புலப்படா சொத்துகள் | **1,852** | 1,870 |
| தள்ளிவைக்கப்பட்ட வரி சொத்துகள் | **1,836** | 1,849 |
| இதர சொத்துகள் | **38,470** | 39,235 |
| மொத்த சொத்துகள் | **860,361** | 882,825 |

| | | |
|---|---|---|
| **பங்குமுதலும் பொறுப்புகளும்** | | |
| வங்கிகளின் வைப்புகளும் இருப்புகளும் | **25,619** | 25,478 |
| - லாபம் அல்லது நட்டத்தின் வழி நியாய மதிப்பில் | **3,199** | 4,545 |
| - கடன் தீர்ப்பு செய்த விலையில் | **22,420** | 20,933 |
| வாடிக்கையாளர்களின் வைப்புகள் | **628,598** | 648,093 |
| - கேட்டவுடன் தரவேண்டிய வைப்புகளும் நடப்புக் கணக்குகளும் | **65,643** | 65,899 |
| - சேமிப்பு வைப்புகள் | **118,163** | 145,107 |
| - காலவரையறை, கேட்டதும் & முன்னறிவிப்பில் தரவேண்டிய வைப்புகள் | **444,792** | 437,087 |
| வர்த்தகப் பொறுப்புகள் | **-** | 5 |
| டெரிவேட்டிவ் பொறுப்புகள் | **4,007** | 4,145 |
| வெளியிடப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் | **27,618** | 32,662 |
| - லாபம் அல்லது நட்டத்தின் வழி நியாய மதிப்பில் | **9,415** | 19,001 |
| - கடன் தீர்ப்பு செய்த விலையில் | **18,203** | 13,661 |
| நடப்பு வரிவிதிப்பு | **1,602** | 1,252 |
| வெளியிடப்பட்ட கடன் பங்குப் பத்திரங்கள் | **844** | 2,892 |
| - லாபம் அல்லது நட்டத்தின் வழி நியாய மதிப்பில் | **688** | 811 |
| - கடன் தீர்ப்பு செய்த விலையில் | **156** | 2,081 |
| தள்ளிவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் | **468** | 226 |
| இதர பொறுப்புகள் | **47,312** | 49,799 |
| கடன் மூலதனம் - கடன் தீர்ப்பு செய்த விலையில் | **15,967** | 11,927 |
| மொத்த பொறுப்புகள் | **752,035** | 776,479 |
| பங்கு மூலதனம் | **41,915** | 41,856 |
| காப்புநிதிகள் | **56,058** | 54,131 |
| மூல நிறுவனத்தின் உரிமையாளர்களுக்குரிய மொத்த பங்குமுதல் | **97,973** | 95,987 |
| கூடுதல் பங்குமுதல் அம்சங்கள் | **10,090** | 10,090 |
| கட்டுப்பாட்டுரிமை இல்லாத பாத்தியதைகள் | **263** | 269 |
| மொத்த பங்குமுதல் | **108,326** | 106,346 |
| மொத்த பங்குமுதலும் பொறுப்புகளும் | **860,361** | 882,825 |

| **பகிர்வு / லாப ஈவுகள்:** | **2023** | 2022 |
|---|---|---|
| **ஆண்டுக்குரிய லாப ஈவு** | **HK$ Mn** | HK$ Mn |
| அறிவிக்கப்பட்டு செலுத்தப்பட்ட இடைக்கால லாப ஈவு | **957** | 430 |
| அறிவிக்கப்பட்டு செலுத்தப்பட்ட சிறப்பு லாப ஈவு | **-** | 1,294 |
| இரண்டாவது இடைக்கால லாப ஈவு | **477** | 456 |
| | **1,434** | 2,180 |

### சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

பேங்க் ஆப் ஈஸ்ட் ஏஷியா லிமிடெட் உறுப்பினர்களுக்கு
(வரம்புக்குட்பட்ட பொறுப்புடன் ஹாங்காங்கில் நிறுவப்பட்டது)

**கருத்து**

நாங்கள் பக்கங்கள் 188 முதல் 377-ல் இடம்பெறும் பேங்க் ஆப் ஈஸ்ட் ஏஷியா லிமிடெட் (வங்கி) அதன் துணை நிறுவனங்கள் (ஒருசேர "தொகுதி") ஆகியவற்றின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்திருக்கிறோம். 31 டிசம்பர் 2023-ல் முடிவுற்ற ஆண்டுக்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருமான அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை மற்றும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை, குறிப்பிடத்தக்க கணக்கு கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கிய ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் குறிப்புகளுடன் முக்கிய கணக்கியல் கொள்கை தகவல் ஆகியவை இதில் அடங்கும்.

எங்கள் கருத்துப்படி, ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் 31 டிசம்பர் 2023 நிலவிய தொகுதியின் நிதி நிலையையும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய அதன் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிப் பலாபலன் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்கத்தையும் ஹாங்காங் சான்றுபெற்ற பொதுக் கணக்காளர்கள் கழகம் ("HKICPA") வெளியிட்ட ஹாங்காங் நிதித் தாக்கல் தரங்களுக்கு ஏற்ப (“HKFRSs”) உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுவதோடு, ஹாங்காங் கம்பெனிகள் சட்ட விதிப்படியும் முறையாகத் தயாரிக்கப்பட்டு படைக்கப்பட்டுள்ளன.

**கருத்துக்கான அடிப்படை**

நாங்கள் ஹாங்காங் சான்றுபெற்ற பொதுக் கணக்காளர்கள் கழகம் HKICPA வெளியிட்ட ஹாங்காங் தணிக்கை தரங்களுக்கு ஏற்ப (“HKSAs”) எங்கள் தணிக்கையை நடத்தினோம். இந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஹாங்காங் சான்றுபெற்ற பொதுக் கணக்காளர்கள் கழகத்தின் நிபுணத்துவ கணக்காளர்களுக்கான நெறிமுறைகளுக்கு (“Code”) ஏற்ப தொகுதியுடன் தொடர்பில்லாத சுயேச்சை அமைப்பாகச் செயல்பட்டு, நெறிமுறைகளுக்கு ஏற்ப எங்களது மற்ற நெறிமுறை பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் எங்கள் கருத்துக்குப் போதிய தகுந்த ஆதாரமளிப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

**KPMG**
*Certified Public Accountants*
8th Floor, Prince’s Building
10 Chater Road
Central, Hong Kong

21 பிப்ரவரி 2024

## ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கை 2023 டிசம்பர் 31ல் நிலவியபடி

| | 2023 | 2022 |
|---|---|---|
| | **HK$ Mn** | HK$ Mn |
| வட்டி வருமானம் | **39,685** | 24,848 |
| பயண்பாட்டு வட்டி முறையில் கணக்கிடப்பட்ட வட்டி வருமானம் | **36,788** | 24,871 |
| சம்பந்தப்பட்ட வட்டி வருமானம் / (செலவினம்) | **2,897** | (23) |
| வட்டி செலவினம் | **(22,811)** | (11,340) |
| நிகர வட்டி வருமானம் | **16,874** | 13,508 |
| கட்டணமும் தரகு வருமானமும் | **3,361** | 3,372 |
| கட்டணமும் தரகு செலவினமும் | **(721)** | (619) |
| நிகர கட்டணமும் தரகு வருமானமும் | **2,640** | 2,753 |
| நிகர வர்த்தக லாபம் | 1,225 | 943 |
| FVTPL மதிப்பில் காட்டப்படும் நிதி அம்சங்களின் நிகர பலாபலன் | **(262)** | (68) |
| FVOCI -ல் கணக்கிடப்பட்ட நிதி சொத்துக்களின் நிகர பலாபலன் | **(26)** | 175 |
| கடன்தீர்ப்பு விலையில் கணக்கிடப்பட்ட நிதி சொத்துக்களின் விற்பனையில் நிகர நட்டம் | **(22)** | (6) |
| நிகர கைக்காப்பு லாபம் | **30** | 201 |
| இதர நடைமுறை வருமானம் | **287** | 448 |
| வட்டியில்லா வருமானம் | **3,872** | 4,446 |
| நடைமுறை வருமானம் | **20,746** | 17,954 |
| நடைமுறைச் செலவுகள் | **(9,432)** | (9,224) |
| சேதார நட்டத்திற்கு முந்தைய நடைமுறை லாபம் | **11,314** | 8,730 |
| நிதி அம்சங்களின் சேதார நட்டங்கள் | **(5,483)** | (5,923) |
| இணை நிறுவனங்களின் சேதார நட்டங்கள் | **(726)** | - |
| இதர சொத்துகளின் சேதார நட்டங்கள் | **(6)** | (3) |
| சேதார நட்டங்கள் | **(6,215)** | (5,926) |
| சேதார நட்டத்திற்குப் பிந்தைய நடைமுறை லாபம் | **5,099** | 2,804 |
| விற்பனைக்குள்ள சொத்துகள் விற்பனையில் நிகர லாபம் | **2** | 1,445 |
| துணை நிறுவனங்கள்/இணை நிறுவனங்களை விற்றதால் நிகர நட்டம் | **(12)** | (1) |
| நிலையான சொத்துகளை விற்றதால் நிகர லாபம் | **14** | 17 |
| முதலீட்டு சொத்துக்களின் மதிப்பீடு நட்டங்கள் | **(86)** | (179) |
| இணை நிறுவனங்கள், கூட்டுத் தொழில்களின் இழப்புகள் கழித்து லாபப் பகிர்வு | **293** | 855 |
| வரிவிதிப்புக்கு முந்தைய ஆண்டுக்குரிய லாபம் | **5,310** | 4,941 |
| வருமான வரி | **(1,174)** | (563) |
| ஆண்டுக்குரிய லாபம் | **4,136** | 4,378 |

| இவற்றுக்குச் சேர வேண்டியவை: | **2023** | 2022 |
|---|---|---|
| | **HK$ Mn** | HK$ Mn |
| மூல நிறுவனத்தின் உரிமையாளர்கள் | **4,118** | 4,359 |
| கட்டுப்பாடுரிமை இல்லாத பாத்தியதை | **18** | 19 |
| ஆண்டுக்குரிய லாபம் | **4,136** | 4,378 |

| **பங்கு ஒன்றில் வருமானம்** | **HK$** | HK$ |
|---|---|---|
| அடிப்படை | **1.32** | 1.32 |
| பணமாக்கம் | **1.32** | 1.32 |

| **தணிக்கை செய்யாத துணை நிதிநிலைத் தகவல்கள்** | **2023** | 2022 |
|---|---|---|
| **மூலதன வள விகிதம்** | **%** | % |
| பொது பங்குமுதல் படி 1 மூலதன விகிதம் | **17.3** | 15.8 |
| படி 1 மூலதன விகிதம் | **19.4** | 17.7 |
| மொத்த மூலதன விகிதம் | **22.0** | 20.1 |

மூலதன வள விகிதங்கள் HKMA வெளியிட்ட மூலதன விதிகளுக்கு ஏற்ப தொகுக்கப்படுகின்றன. மூலதன விதிகளுக்கு ஏற்ப, இடர் மதிப்பீட்டுச் சொத்துகளின் கடன் இடரைக் கணக்கிட ஆதார உள்விகித அடிப்படை அணுகுமுறையையும், சந்தை இடரைக் கணக்கிட உள் மாடல்கள் அணுகு முறையையும், நடைமுறை இடரைக் கணக்கிட வழக்கமான அணுகுமுறையையும் வங்கி பயன்படுத்தியது.

ஒழுங்குமுறை நோக்கத்திற்கான ஒருங்கிணைப்பு அடிப்படை, கணக்கியல் நோக்கத்திற்கான ஒருங்கிணைப்பு அடிப்படையிலிருந்து வேறுபட்டது. ஒழுங்குமுறை நோக்கத்திற்கான ஒருங்கிணைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் துணை நிறுவனங்கள், மூலதன விதிகள் பிரிவு 3C-ன் படி HKMA வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒழுங்குமுறை நோக்கத்திற்கான ஒருங்கிணைப்பில் உள்ளடக்கப்படாத துணை நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்பால் அதிகாரம்பெற்று கண்காணிக்கப்படும் நிதித்துறை அல்லாத மற்றும் பங்குப்பத்திர, காப்புறுதி நிறுவனங்களாகும். இவை மூலதன விதிகள் மற்றும் வங்கிச் சட்டத்தின்கீழ் அதிகாரம்பெற்ற அமைப்புகளுக்கு நிகராக தொழில் நடவடிக்கைகளை ஆதரிக்கத் தேவையான மூலதனத்தைக் கட்டிக்காப்பது தொடர்பான மேற்பார்வை ஏற்பாடுகளுக்கு உட்பட்டவை. இந்தத் துணை நிறுவனங்களிலுள்ள வங்கியின் பங்குகள், மூலதன விதிகளின் பகுதி 3-ன் வரம்புகளுக்கு ஏற்ப அதன் படி 1 பொது பங்குமுதலில் இருந்து கழிக்கப்பட்டுள்ளன.

### இயக்குநர்கள் சபை

***சபையின் சிறப்பு ஆலோசகர்:*** Dr. Isidro FAINE CASAS

| **நிர்வாக இயக்குநர்கள்** | **நிர்வாகி அல்லாத இயக்குநர்கள்** | **நிர்வாகி அல்லாத சுயேச்சை இயக்குநர்கள்** |
|---|---|---|
| Dr. the Hon. Sir David LI Kwok-po *(Executive Chairman)* | Professor Arthur LI Kwok-cheung *(Deputy Chairman)* | Dr. Allan WONG Chi-yun *(Deputy Chairman)* |
| Mr. Adrian David LI Man-kiu *(Co-Chief Executive)* | Mr. Aubrey LI Kwok-sing | Dr. the Hon. Rita FAN HSU Lai-tai |
| Mr. Brian David Ll Man-bun *(Co-Chief Executive)* | Mr. Winston LO Yau-lai | Mr. Meocre LI Kwok-wing |
| | Mr. Stephen Charles LI Kwok-sze | Dr. the Hon. Henry TANG Ying-yen |
| | Dr. Daryl NG Win-kong | Dr. Delman LEE |
| | Mr. Masayuki OKU | Mr. William Junior Guilherme DOO |
| | Dr. Francisco Javier SERRADO TREPAT | Dr. David MONG Tak-yeung |

**தலைமையகம்:** 10 Des Voeux Road Central, Hong Kong

**சிங்கப்பூர் கிளை:** 60 Robinson Road, BEA Building, Singapore 068892 (நிறுவனப் பதிவு எண்: S52FC1059A)

கணக்குகளுக்கான குறிப்புகள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் ஓர் அங்கமாகும். அறிக்கைகள், வங்கியின் விவரங்களைப் பற்றி முற்றிலும் புரிந்துகொள்ள வேண்டுமானால் வங்கியின் தணிக்கையான நிதிநிலை அறிக்கைகளை முழுமையாக பார்க்க வேண்டும். இதை https://www.hkbea.com/html/en/bea-about-bea-investor-communication-annual-and-interim-reports.html வங்கியின் இணையதளத்தில் கிடைக்கும்.

வங்கி நிர்வாகம் நீதிமன்ற ஆணையின்கீழ் வைக்கப்பட்டால், வங்கி கலைக்கப்பட்டால் அல்லது அதற்கு நிகரான நடவடிக்கைகள் நடைபெற்றால், வைப்புத்தார்களுக்குப் பணத்தை திருப்பித் தரும்போது, வங்கியின் வெளிநாட்டு கிளை அலுவலகங்களின் வைப்புத்தார்களுக்கு, தாயக நாட்டின் வைப்புத்தார்களைவிட குறைந்த முன்னுரிமை தரும்படி எங்கள் தலைமையகத்திற்கு வங்கி நிறுவப்பட்ட தாயகத்தின் ஒழுங்குமுறை ஆணையம் நிபந்தனையிட்டுள்ளது.